

குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி, நடுவீரப்பட்டு பகுதியில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை ஆதரித்து, தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் பிரச்சாரம் செய்து தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். கூட்டணிக்கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், வாக்காளர்கள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆதரவுடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டும் எனக்கு திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தே.மு.தி.க பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கை.ரா.சடகோபன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி கோசத்திரம் நான்கு முனை சந்திப்பு மற்றும் காட்டுக்கூடலூர் பேருந்து நிலையம் பகுதிகளில் தே.மு.தி.க,தலைவர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நெய்வேலி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் சபா.இராசேந்திரன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.



விழுப்புரம் நகரப் பகுதியில் நமது வெற்றி வேட்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் மிதிவண்டியில் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார் .

### தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில்

# ஆசிரியர்கள் - தி.மு.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள்!

## சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் வேண்டுகோள்!



சென்னை. ஏப். 22 -

நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற தி.மு.க. முற்போக்குக் கூட்டணிக்குப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் வாக்களித்து வெற்றிக்கு வழிசெய்ய வேண்டும் என்று சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவரும் சென்னைப் பல்கலைக் கழக ஓய்வாசிரியர் பேரவை இந்நாள் தலைவரும் ஆன பேராசிரியர் மா.செல்வராசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு!

பேரறிஞர் அண்ணா ஆட்சியில் இருந்த கால முதல் ஆசிரியர்கள் மேல் அளவற்ற மதிப்புக் கொண்டு அவர்களது தேவைகளை முழுமையாக நிறைவேற்றி வருகிறது தி.மு.க. அரசு.தமிழாசிரியர் தலைமை ஆசிரியர் ஆக முடியும் என்று ஆணை வெளியிட்டது தி.மு.க அரசு. ஊதியக் குழுக்கள் அமைத்து வறுமையில் இருந்த ஆசிரியர்கள் வளம் பெறும் வகையில் ஊதிய உயர்வை வாரி வழங்கியவர் முதல்வர் கலைஞர்! ஊர தோறும் பள்ளி என உருவாக்கியதால் ஆசிரியர்கள் எண்ணிக்கை உயர்ந்தது. பரிவுரை இல்லாமல் பணிமூப்பு அடிப்படையில் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஆணயிட்டவர் கலைஞர் கல்லூரிகளின் எண்ணிக்கை கடகட என உயர்ந்தது கலைஞரால்! சிறிய நகரங்களில் எல்லாம. கல்லூரிகள் திறந்து தனியார்மயம் இருந்த கல்லூரிக் கல்வியை அரசுக் கல்லூரிகள் மூலம் இலவசமாக்கி அதிகப்படுத்தினார் . கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக நல்கை ஆணைய உயர் ஊதியத்தை (யு.ஜி.சி) ஆசிரியர்கள் கேட்குமுன் 1989,1996,2006 ஆம் ஆண்டுகளில் அள்ளி வழங்கினார். ஆனால் இதே யு. ஜி.சி ஊதிய உயர்வை அஇ அதிமுக ஆட்சியில் ஆசிரியர்கள் போராட்டங்கள் நடத்திச் சிறைகளை நிரப்பிய பின்னரே பெற முடிந்தது என்பது ஆசிரியர்கள் நினைவில் இருக்கும்.

இன்றைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கல்வி வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக உள்ளார். பல்வேறு திட்டங்கள், சலுகைகள் மூலம் கற்போர் எண்ணிக்கையை உயர்த்தி வருகின்றார் . ஆண்டுக்கு ஐம்பதாயிரம் கோடி உரூபா கல்விக்கு ஒதுக்குகின்றார் மகப்பேறு விடுப்பு முதல் ஆசிரியர்களுக்கு எவ்வளவோ சலுகைகளை அளித்துள்ளார்.நீக்கப் பட்ட பழைய ஓய்வூதியத்தை ஆசிரியர்கள் விருப்பப்படி நிறைவேற்றி உள்ளார்.

இருபது அரசு கலை அறிவியல் கல்லூரிகள் திறந்துள்ளார்.

பதினான்கு பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர் களை நியமிக்க முடியா நெருக்கடி நிலையை ஒன்றிய அரசை ஆளும் கட்சி உருவாக்கி வருகின்றது! உயர்கல்வி எல்லோருக்கும் என்ற திராவிட மாடல் கொள்கைக்கு எதிராக உயர்கல்வி ஒரு சிலர்க்கே என்ற பிற்போக்குக் கொள்கையை ஒன்றிய அரசு நடைமுறைப் படுத்தி வருகிறது.

எனவே பள்ளிக் கல்வி சிறக்க,பல்கலைக்கழக,கல்லூரிக் கல்வி மேம்பட முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான மதச்சார் பற்ற தி.மு.க. முற்போக்குக் கூட்டணிக்கு எல்லா ஆசிரியர்களும் வாக்களித்து வெற்றபெறச் செய்வது கடமையாகும்.

இவ்வாறு மா.செல்வராசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அ.தி.மு.க ஆட்சியில் வன்னியர்களுக்கு துரோகம்தான் இழைக்கப்பட்டுள்ளது!

# வன்னியர்களுக்கு நடந்த நன்மைகள் எல்லாம் தி.மு.க. ஆட்சியில் மட்டுமே!

## வன்னியர்கள் தி.மு.க. அணிக்கு வாக்களிக்க விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் தருமபுரியில் பிரச்சாரம்!



தருமபுரி, ஏப். 22 -

திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மத சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் களை ஆதரித்து விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தமிழ்நாடு முழுவதும் களப்பணியாற்றி வருகிறது. கட்சியின் தலைவர் பொன்குமார் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். அந்த அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்தில் போட்டியிடும் திமுக தலைமையிலான அணியின் வேட்பாளர் களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். குறிப்பாக பென்னாகரம், தர்மபுரி போன்ற தொகுதிகளில் அவர் பிரச்சாரம் மேற்கொண்ட போது பேசியதாவது:

இந்த மாவட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமான வன்னியர்கள் நிறைந்த மாவட்டமாகும். வன்னியர்களுக்கு நடந்த பல்வேறு நன்மைகள் அனைத்தும் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் மட்டுமே நடந்துள்ளது. அதிமுக ஆட்சியால் வன்னியர்களுக்கு இன்னல்கள் மட்டுமே நேர்ந்துள்ளது.

மருத்துவர் ஐயா ராமதாஸ் அவர்கள் தலைமையில்வன்னியர்கள் தனி இட ஒதுக்கீடு கோரி நடத்திய சாலை மறியல் போராட்டத்தில் 21 வன்னியர்களை குருவிகளை சுடுவதுப் போன்று சுட்டு வீழ்த்தியது அப்போதைய அ.தி.மு.க அரசு. அந்தப் போராட்டத்தில் பல்லாயிரம் வன்னியர்கள் மீது வழக்குத் தொடுத்து நீதி மன்றத்திற்கு அலைகழிக்க வைத்தது அப்போதைய அ.தி.மு.க அரசு. இறுதி வரை வன்னியர்களின் இடஒதுக்கீடு கோரிக்கையை ஏற்காமல் அவமதித்தது அன்றைய அ.தி. மு.க அரசு. வன்னியர்களை ஏமாற்றிட அவசரகதியில், சட்டப் பாதுகாப்பின்றி 10.5 தனி ஒதுக்கீடு சட்டம் இயற்றியது எடப்பாடி அ. தி.மு.க அரசு. இப்படிப் பட்ட அ,தி,மு,கவோடு கூட்டணி அமைத்துள்ள அன்புமணி பாட்டாளி மக்கள் கட்சிக்கு வாக்களித் திட வேண்டுமா?.

இட ஒதுக்கீடு போராட் டத்தில் உயர்நீத்த 21 தியாகிகளின் இரத்தத்தில் வளர்ந்த பா.ம.க. மத்தியில் தொடர்ந்து முக்கிய அமைச் சர்களாக இருந்தும் அந்தக் குடும்பங்களுக்கு இன்று வரை ஒன்றுமே செய்யாத அன்புமணி பா.ம.க. வன்னியர்களுக்கு என்ன செய்திட போகிறது?. பகல், இரவு பாராமல் பட்டி தொட்டி எல்லாம் பயணித்து பாட்டாளி மக்கள் கட்சியை வளர்த்தெடுத்த ஐயா இராமதாசுக்கு துரோகம் செய்த அன்புமணி பாட்டாளி மக்கள் கட்சிக்கா ஓட்டு?. பா.ம.கவின் அடித்தளமாக இருந்த மாவீரன் குரு மற்றும் அவரது குடும்பத்தைக் கைவிட்ட பா.ம,க விற்கு வாக்களித்திட வேண்டுமா?.

தி.மு.க ஆட்சியில்

• ஆயிரக்கணக்கான வன்னியர் பிள்ளை கள் பொறியாளர்களாக. மருத்துவர்களாக. வழக்கறிஞர்களாக பட்டம் பெற்றிடவும், வேலை வாய்ப்புகளைப் பெற்றிடவும் காரணமான வன்னியர் உள்ளிட்ட மிகப் பிற்படுத்தப் பட்டோருக்கு 20ரூ தனி இடஒதுக்கீடு வழங்கப் பட்டது.

• வன்னியர் இடஒதுக் கீடு போராட்டத்தில் அ.தி. மு.க. அரசால் சுட்டுக் கொல்லப்பட்ட 21 பேரை சமூகநீதிதியாகிகள் என அறிவித்து அவர்களது குடும்பங்களுக்கு தலா ரூ,3 இலட்சம் இழப்பீடு வழங் கப்பட்டது.

• அவர்களின் வாரிசுகள் இன்று வரை மாதம்ரூ,3000 வீதம் ஓய்வூதியம் பெற்றிட உத்தரவிடப்பட்டது.

• இடஒதுக்கீடு போராட் டத்தில் பல்லாயிரக்கணக் கான வன்னியர்கள் மீது அ.தி.மு.க. அரசால் போடப் பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு நிம்மதி யடைய செய்தது.

• வன்னிய வள்ளல்கள் பலரால் அறக்கட்டளை பெயரில் எழுதிவைக்கப் பட்டுள்ள இலட்சம் கோடிக்கும் அதிகமான சொத்துக்களை ஒருங்கிணைத்து. வன்னியர்களுக் குப் பயன்படுத்திட 2009 இல் “வன்னியர் பொதுச் சொத்து நலவாரியம்’ அமைக்க உத்தரவிடப் பட்டது.

• சென்னையில் பெருந் தலைவர் படையாட்சியாருக்கு சிலை வைக்க இடம் அளிக்கப்பட்டது.

• வாழப்பாடியாரால் நிறுவப்பட்ட படையாட் சியார் சிலை கலைஞரால் திறந்து வைக்கப்பட்டது.

• இடஒதுக்கீடு தியாகிகளுக்கு விழுப்புரத்தில் மணிமண்டபம் நிறுவ ப் பட்டுள்ளது.

• முன்னாள் அமைச்சர் எ,கோவிந்தசாமி அவர்களுக்கு மணிமண்டபம் நிறுவப்பட்டுள்ளது.

• தியாகி கடலூர் அஞ் சலை அம்மாள் அவர்களுக்கு கடலூரில் சிலை நிறுவி திறக்கப்பட்டுள்ளது.

• சுதந்திரப் போராட்ட தியாகி அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு அரசு விழா எடுக்க அறிவிக்கப் பட்டுள்ளது.

• கடலூரில் தியாக அஞ் சலை அம்மாள் அறிவுலகக் கட்டடம் கட்ட அறிவிக் கப்பட்டுள்ளது.

• சுதந்திரப் போராட்ட தியாகி நாகப்பபடையாட் சியாருக்கு மயிலாடுதுறையில் சிலை வைக்கப்பட் டது,

• முதன் முதலில் வன்னியர் ஒருவரை மத்திய அமைச்சராக்கியது தி.மு.க அரசு

• அரசு பணியாளர் தேர் வாணையத்திற்கு (கூகுஞ ஞஊ) வன்னியர்களைத் தலைவராக நியமித்தது,

• முதன் முதலில் வன்னியர் ஒருவரை உயர் நீதி மன்ற நீதிபதியாக்கியது என அனைத்து நன்மைகளும் வன்னியர்களுக்கு தி.மு.க ஆட்சியில் மட்டுமே கிடைத்துள்ளது.

எனவே வன்னியர்கள் இதனை எண்ணிப் பார்த்து தி.மு.க அணிக்கு வாக்களித் திட வேண்டும். இவ்வாறு தலைவர் பொன்குமார் அவர்கள் பேசினார்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் சபா.இராஜேந்திரன்,நெய்வேலி நகரம் மெயின் பஜார் வர்த்தகர் சங்க நிர்வாகிகளிடம் வாக்கு சேகரித்தார். முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சபா . பாலமுருகன், நகர கழக செயலாளர் வி.குருநாதன் , தொ. மு.ச. தலைவர் ஞா. ஞான ஒளி, பொருளாளர் அ.அப்துல் மஜித், அலுவலக செயலாளர் ஆர். சீனிவாசன் திராவிட தொழிலாளர் ஊழியர் சங்கம் சிறப்புதலைவர் ஆர்.கோபாலன், பொதுச்செயலாளர் சபா.மணிமாறன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். ராஜேஷ்,நகர அவைத்தலைவர் என்.நன்மாறப்பாண்டியன், மாவட்டப்பிரதிநிதி ஏ. நாசர்,பொருளாளர் மதியழகன்,நகர துணைசெயலாளர்கள் செந்தில்,செந்தமிழ்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன், ரிஷிவந்தியம் ஊராட்சியில் திரண்டிருந்த பொதுமக்களிடம், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் தா. உதயசூரியன் கல்வராயன் மலை ஊராட்சி ஒன்றியம், மூலக்காடு,வஞ்சிக்குழி,தும்பாராம்பட்டு, சேராப்பட்டு, தேக்கம்பட்டு கிளாக்காடு, இன்னாடு, வெள்ளிமலை, குண்டியாநத்தம், கொடுந்துறை, மேல் பாச்சேரி உள்ளிட்ட மலை கிராம பகுதிகளில் நேரடியாகச் சென்று திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு கால எண்ணற்ற சாதனை திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார், அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்து மலர் தூவி, ஆட்டம் பாட்டத்துடன் உற்சாகமான வரவேற்பு அளித்தனர், இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.